விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 208 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 31 வெள்ளிக்கிழமை (15.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




போராட்டக்காரர்களின்
## கோரிக்கைக்கு தீர்வு காணவேண்டியது அவசியம்
ஐ.நா வலியுறுத்து 10 பக்கம் பார்க்க

## வன்முறையைத் தடுக்க இராணுவத்துக்கு அதிகாரம்
10 பக்கம் பார்க்க

## கோட்டாவை கைது செய்க
பிரிட்டனில் வலியுறுத்து 03 பக்கம் பார்க்க

அமைதிப் போராட்டங்கள்
# புரட்சியாக மாற இடமளிக்கமாட்டேன்
### பதில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
அமைதியான போராட்டங்கள் புரட்சியாக மாற ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

# இராஜினாமாக் கடிதத்தை கையளித்தார் கோட்டா
### உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று சபாநாயகரால் வெளியிடப்படும்



(கொழும்பு)
ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமாச் செய்த தனது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பியுள்ளார்.
இந்தநிலையில் ஜனாதிபதியின் பதவி விலகல் கடிதத்தை பெற்றுக்கொண்டதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன வின் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. (11ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மீண்டும் ஊரடங்கு
(கொழும்பு)
கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.
நேற்று நண்பகல் ▶11

விலகினார் கோட்டா
## பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்
(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இருந்து உத்தியோகபூர்வமாக பதவி விலகல் கடிதம் ▶11

## குருந்தூர்மலையிலுள்ள விகாரை உள்ளிட்ட கட்டுமானத்தை அகற்றுக
### முல்லை நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு
- ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் தமது வழிபாட்டை மேற்கொள்ள தடைவிதிக்கக்கூடாது.
- அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு பணிப்பு.

11ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.கந்தர்மடத்தில் புகையிரத விபத்து
### குடும்பஸ்தர் பலி



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - கந்தர்மடம் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற புகையிரத விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கந்தர்மடம் - ஆத்திசூடி ▶11

## பிரதமர் பதவிக்கு சஜித் பெயர் பரிந்துரை
(கொழும்பு)
பிரதமர் பதவிக்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பெயர் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.
நேற்று இடம் ▶11

பிரதம நீதியரசர் முன்னிலையில்
## ஜனாதிபதியாக ரணில் இன்று பதவியேற்பார்
(கொழும்பு)
பிரதம நீதியரசர் முன்னிலையில் ஜனாதிபதியாக இன்று ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
கோட்டா தனது பதவி விலகலை அறிவித்துள்ள நிலையில் இவ் அறிவித்தல் வெளியாகியுள்ளது.
இந்த நிலைமையில் குழப்பங்கள் வரலாம் எனக் கருதியே கொழும்பில் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. ▶11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்கள் போராட்டத்தை கலவரமாக்க முயற்சி



## வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை

(கொழும்பு)

**மக்களின் எழுச்சிப் போராட்டத்தை ஒரு தரப்பினர் கலவரமாக்க முயற்சிக்கின்றனர். இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு எச்சரித்தார் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.**

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதை தொடர்ந்து பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளமையினால் நாட்டு மக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள். ஜனநாயக கோட்பாடு தொடர்பில் கருத்துரைக்கும் பதில் ஜனாதிபதி நாட்டு மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து பதவி விலக வேண்டும்.

மக்கள் போராட்டத்தை கலவரமாக மாற்றியமைக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். போராட்டத்தில் கலந்துக்கொள்ளும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் எத்தலைவர்களும் எதிர்கொள்ளாத நெருக்கடியான சூழ்நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்கொண்டுள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தவறான பொருளாதார கொள்கை குறித்து உரிய நடவடிக்கையினை ஆரம்பத்தில் முன்னெடுத்திருந்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இந்நிலைமை தோற்றம் பெற்றிருக்காது.

சகோதர பாசத்திற்காக கட்டுப்பட்டு பஸில் ராஜபக்ஷவிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுக்காத காரணத்தினால் ராஜபக்ஷர்களினது அரசியல் எதிர்காலம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டு மக்களின் எதிர்காலமும் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் கடுமையான போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை மக்கள் போராட்டத்தின் பிரதான வெற்றியாகும்.

பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளமையினை தொடர்ந்து மக்கள் ஆத்திரமடைந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

மக்கள் போராட்டத்தை ஒரு தரப்பினர் வன்முறையாக மாற்றியமைக்க முயற்சிக்கிறார்கள். பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியினர் பொறுப்புக்கூற வேண்டும்.

நாடு அமைதியற்ற நிலையில் உள்ளபோது பொறுப்பாக கட்சி என்ற ரீதியில் மக்களை தூண்டிவிடாமல் அரசியலமைப்பின் ஊடாக நெருக்கடிக்கு தீர்வு காண அவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜனநாயக கோட்பாடு தொடர்பில் கருத்துரைக்கும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து பதவி விலகி பாராளுமன்றத்தின் ஊடாக தீர்மானங்களை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (ம-7)

---

### சங்கத்தானையில்

## வீட்டு வளவொன்றில் கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் உள்ள வீட்டு வளவொன்றில் நேற்று வியாழக்கிழமை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

காணியை துப்புரவு செய்தபோது குறித்த கைக்குண்டு அடையாளம் காணப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் கைக்குண்டினை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (ம-7,30)



---

## சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுங்கள்

### ஐ.நா. அறிவிப்பு

வன்முறைகளில் இருந்து விலகி அமைதியான முறையில் அதிகாரப் பரிமாற்றத்திற்கு ஆதரவளிக்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் டுவிட்டர் கணக்கில் வெளியிட்டுள்ள குறிப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து வன்முறைகளையும் கண்டிப்பதாகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்வதாகவும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் [illegible] தெரிவித்துள்ளது. [illegible]

---

### கோட்டாவின் இராஜினாமா கடிதம் தொடர்பில்

## பிரதம நீதியரசர், சட்டமா அதிபருடன் சபாநாயகர் மகிந்த ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதம், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அது சம்பந்தமாக பிரதம நீதியரசருடன் அவர் தற்போது ஆலோசனை நடத்தி வருகின்றார்.

கடிதத்தின் சட்டபூர்வ தன்மை மற்றும் அடுத்தக்கட்ட நகர்வுகள் சம்பந்தமாகவே இந்த ஆலோசனை பெறப்படுகின்றது.

சட்டமா அதிபருடனும் கலந்துரையாடல் இடம்பெறும்.

அதன்பின்னர் சபாநாயகர் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

ஜூலை 09 ஆம் திகதி முதல் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் அதிகாலை நாட்டிலிருந்து வெளியேறினார்.

மாலைதீவு சென்றடைந்த அவர், அங்கிருந்து நேற்று சிங்கப்பூர் நோக்கி பயணமானமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

---

## இலங்கையின் சட்ட ஆட்சி பாதுகாக்கப்பட வேண்டும்

### பொதுநலவாய அமைப்பு

(கொழும்பு)

பொதுநலவாய சாசனத்தின் விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு இணங்கி ஜனநாயக ஆட்சி, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்குமாறு இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்களுக்கு பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கு பொதுநலவாய செயலகத்தின் அர்ப்பணிப் [illegible] டும் வலியுறுத்தினார்.

எனவே அமைதியான மாற்றத்தை நோக்கி இலங்கையிலுள்ள அனைவரையும் நிதானத்துடன் செயற்படுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடுகளில் ஒன்றாகவும் நவீன பொதுநலவாய அமைப்பின் ஸ்தாபக உறுப்பினராகவும் இலங்கை எப்போதும் மக்களால் போற்றப்படுகிறது.

ஆகவே ஜனநாயகக் கோட்பாடுகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்க தலைமைப் பதவியில் உள்ள அனைவரையும் தாம் அழைப்பதாக பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை மக்களின் ஆட்சி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கரிசனைகள் நிவர்த்தி செய்யப்படுவது மிகவும் முக்கியமானது.

இந்த நோக்கத்திற்காக தொடர்ந்து உரையாடல்களை மேற்கொள்ளுமாறும் பொருளாதாரத் தேவைக்காக இலங்கைக்கு தொடர்ந்தும் உதவுமாறும் சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பிடியாணை மூலம் கோட்டா கைது செய்யப்பட வேண்டும்

## பிரிட்டன் பாராளுமன்றில் வலியுறுத்து

**(கொழும்பு)**

**இலங்கையின் இன்றைய நிலைமைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமன்றி அனைத்து ராஜபக்ஷக்கள் மற்றும் அவர்களின் கூட்டாளிகளும் பொறுப்பு. எனவே, அவர்களுக்கு எதிராகவும் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட வேண்டும். இதற்கு பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவர் சர் எட் டேவி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.**

ராஜபக்ஷ அரசின் ஊழல், வரி குறைப்பு, அதிகரித்த பாதுகாப்பு செலவீனங்கள் மற்றும் கொடூரமான பொலிஸ் அதிகாரங்கள் ஆகியவற்றால் இலங்கையில் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஜனநாயகவாதிகளை ஆதரிக்கும் வகையில் ஒரு முழுமையான பொருளாதார மற்றும் அரசியல் தீர்விற்காக ஐக்கிய இராச்சியம் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிறருடன் இணைந்து ஒரு பொருளாதார மீட்புப் பொதியை உறுதி செய்ய நாம் முயற்சிக்கலாம். இந்தப் பொதி ஊடாக தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் உட்பட நாட்டிலுள்ள அனைவரினதும் மனித உரிமைகளின் பாதுகாப்பையும் உறுதி செய்து கொண்டு முன்னேற முடியும்.

எனினும் அதற்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு எதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கேட்டுக்கொண்டார். (நி)

# ஜனாதிபதி மாளிகையை விட்டு திடீரென விலகிய ஆர்ப்பாட்டக்காரர்கள்



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகத்திலிருந்து உடனடியாக வெளியேற காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர்.

போராட்டம் வேறு வகையில் திசை திரும்புவதனை தவிர்க்க வேண்டும் என ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் ஊடவியலாளர் சந்திப்பு ஒன்றை நேற்று நடத்திய நிலையில் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றம் மற்றும் சபாநாயகர் இல்லத்தை சுற்றிவளைக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டுள்ள நிலையில் அங்கு சென்ற ஒரு குழுவினரால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

எனினும் இவ்வாறு தொடர்ந்தால் நாட்டின் நிலைமை மிகவும் பயங்கரமானதாக மாறிவிடும். எனவே தாங்கள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளியேறுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இது ஒரு சமாதானமான போராட்டமாகக் காணப்பட வேண்டும். வன்முறை எங்கள் நோக்கமல்ல. எனினும் கோட்டாபய மற்றும் ரணிலை விரட்டும் வரை எங்கள் போராட்டம் முடிவுக்கு வராதென ஆர்ப்பாட்ட ஏற்பட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி)

# இராணுவ நடமாட்டம் கொழும்பில் அதிகரிப்பு



(கொழும்பு)

கொழும்பின் பல பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வீதிகளில் நேற்று இராணுவ நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி நேற்று முன்தினம் முற்பகல் பிரதமர் அலுவலகம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் பிரதமர் அலுவலகம் ஆர்ப்பாட்டக்காரர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து மாலையளவில் பாராளுமன்றத்திற்கு அருகில் மாபெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் இதன்போது தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியிருந்தன. அத்துடன் நேற்று அதிகாலை ஐந்து மணியுடன் நாடளாவிய ரீதியிலான ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிறகும் இராணுவ நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# சிங்கப்பூர் பறந்தார் கோட்டா

(மாலே)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவில் இருந்து புறப்பட்டு சவுதி ஏர்லைன்ஸ் விமானம் SV 788 இல் சிங்கப்பூர் புறப்பட்டதாக மாலைதீவு ஜர்னல் தெரிவித்துள்ளார்.

இந்த விமானம் ஜெட்டாவில் உள்ள ஏர்லைன்ஸ் அலுவலகத்தால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருடன் மேலும் மூன்று பேர், அவரது மனைவி மற்றும் இரண்டு பாதுகாப்புப் பணியாளர்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. (நி)

# நாட்டை சபாநாயகரிடம் ஒப்படையுங்கள்

## சுயேட்சைக் கட்சிகள்

(கொழும்பு)

பிரதமர் உடனடியாக தனது பதவியை இராஜினாமா செய்து சபாநாயகரிடம் நாட்டை ஒப்படைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என சுயேட்சை கட்சிகள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன. (நி)

# புதிய ஜனாதிபதியை நியமியுங்கள்- டலஸ்

(கொழும்பு)

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த 9ஆம் திகதி ஏற்றுக்கொண்டவாறு செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்திலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம், உடனடியாக புதிய ஜனாதிபதியை நியமிக்க வேண்டும் எனவும், பின்னர் ஒப்புக் கொண்டபடி புதிய பிரதமரை நியமிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனை ஒத்திவைப்பதன் மூலம் தற்போதைய நிலைமை மேலும் குழப்பமடையலாம் எனவும் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (நி)

# ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்து அவரை பதவியில் இருந்து நீக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் தொடர்பில் ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று தமது ஆதரவை வழங்கும் எனவும் இந்த பிரேரணையை



சபாநாயகருக்கு விரைவில் அறிவித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஒரு இரவு தங்க 18 இலட்சம்; மாலைதீவில் செலவிட்ட கோட்டா

## இந்திய ஊடகம் தகவல்

(டில்லி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவிற்கு தப்பிச் சென்ற நிலையில், அந்நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள சொகுசு விடுதியில் தங்கியிருக்க பெருந்தொகை பணத்தினை செலவிட்டுள்ளதாக இந்திய ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.


இலங்கையிலிருந்து வெளியேறியுள்ள ஜனாதிபதி கோட்டாபய மாலைதீவில் உள்ள சொகுசு விடுதியில் தங்கியிருந்ததாகவும் அங்கு ஒரு இரவு தங்குவதற்கு சுமார் 18 இலட்சம் ரூபாய் (இலங்கை ரூபாயில்) செலவிட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ்

## பிறீமியர் லீக் கால்பந்தாட்ட போட்டி

## 6 ஆம் நாள் போட்டி முடிவு




வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் தொடரின் கால்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற ஆறாம் நாள் போட்டியின் முதலாவது போட்டி மாஸ்டர்ஸ் அணிக்கும் குச்சம் கிங்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. மேற்படி போட்டியில் மாஸ்டர்ஸ் அணியினர் 5:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மாஸ்டர்ஸ் அணியின் முன்கள வீரர் யுந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டி திக்கம் FC அணிக்கும் SK ரைடேர்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றுக்கொண்டமையால் ஆட்டமானது சம நிலையில் முடிந்தது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக SK ரைடேர்ஸ் அணி வீரர் ஜெகன் தெரிவு செய்யப்பட்டார். (6)

# லங்கா பிறீமியர் லீக் இருபது-20 போட்டி ஓகஸ்டில் ஆரம்பம்




ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள 3 ஆவது லங்கா பிறீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடப்பு சம்பியன் ஜப்னா கிங்ஸ் மற்றும் 2 ஆம் இடத்தைப் பெற்ற கோல் கிளாடியேட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியுடன் எதிர்வரும் ஓகஸ்ட் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த் இரண்டு அணிகளுடன் கொழும்பு ஸ்டார்ஸ், தம்புள்ள ஜயன்ட்ஸ், கண்டி பெல்கன்ஸ் ஆகிய அணிகளும் பங்குபற்றுகின்றன.

ஒவ்வொரு அணியும் ஒன்றையொன்று இரண்டு தடவைகள் எதிர்த்தாடும் வகையில் இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும் லீக் சுற்றில் முதல் 14 போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் ஓகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரை நடைபெறும்.

அடுத்த 6 போட்டிகள் அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் ஓகஸ்ட் 10 ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 17 ஆம் திகதிவரை நடைபெறும்.

இறுதிச் சுற்று போட்டிகளும் அம்பாந்தோட்டையிலும் மூன்றாவது எல்.பி.எல். அத்தியாயத்தின் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி ஓகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெறும். (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2664

**தர்மினி**




**றேணுகா**




**பவிதா**





**ஜெனுசன்**




**நதீப்**




**கதூஸ்**





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக அரசின் நன்கொடை

# இரண்டாம் கட்ட நிவாரணம் கிளிநொச்சி வந்தடைந்தது



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 35,400 கிலோகிராம் அரிசியும் 2000 கிலோ பால் மா என்பன தமிழக அரசின் நன்கொடையின் கீழ் இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்திற்கான இந்திய மக்களின் இரண்டாம் கட்ட நிவாரண உதவி பொருட்கள் நேற்று கிளிநொச்சியை வந்தடைந்ததுடன் அவை நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

இன்று ஏனைய பிரதேச செயலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6-315-316)

# கிளி.யில் எரிவாயு விநியோகம்

(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு பின்னர் லிட்ரோ காஸ் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.



கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ள விநியோகஸ்தர் காரியாலயத்தில் வைத்து நேற்று 600 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

இதனை பெற்றுக்கொள்ள அதிகாலை வேளையிலேயே மக்கள் வரிசையில் நின்று பெற்றுக் கொண்டனர். (நி-6-315-316)

# ஆற்றின் கரையிலுள்ள மணலினை அகற்றுங்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றில் துப்புரவு செய்யப்பட்டு ஆற்றின் அருகில் குவிக்கப்பட்டுள்ள மணலினை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அக்கராயன் ஆறு துப்புரவு செய்யப்படாமல் இருந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவ பிரிவின் ஊடாக மூன்று மில்லியன் செலவில் அக்கராயன் ஆற்றில் முதற் கட்டமாக மூன்று கிலோமீற்றர் வரையான தூரம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆற்றில் இருந்து அகற்றப்பட்ட மணல் ஆற்றிற்கு அருகிலேயே குவிக்கப்பட்டு உள்ளது.

மழை பெய்தால் மணல் மீண்டும் ஆற்றிற்குள் பரவக் கூடிய நிலை உள்ளது.

இந் நிலையில் ஆற்றின் கரையில் இருந்து மணலினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (நி-6-350)

# தமிழக அரசின் நிவாரணங்களை கிராம உத்தியோகத்தர் ஊடாக வழங்குங்கள்

## முல்லைத்தீவு கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழக அரசின் 2 ஆம் கட்டமாக வழங்கப்பட்ட அரிசியினை பிரதேச செயலகங்களுக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதால் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் குறித்த அரிசியினை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கிராமங்களில் வறுமையான குடும்பங்கள் என அடையாளப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கே தலா 10 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில் சில கிராமங்களில் 20 கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் பயணம் செய்து அரிசியினை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் பல குடும்பங்கள் அரிசியினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் கிராம உத்தியோகத்தர் ரீதியாக அரிசியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கிராமங்களில் வாழ்கின்ற குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் தருமபுரம் - பிரதேச மருத்துவமனைக்கு மருத்துவ பொருட்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு முப்பத்தொராயிரத்து எழுநூற்று நாற்பது ரூபாய் பெறுமதியான மருத்துவப் பொருட்களை மருத்துவ அத்தியட்சகரிடம் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 200 | 360 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 260 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 600 |
| தக்காளி | 250 | 250 | 280 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 240 |
| கோவா | 360 | 350 | 300 | 360 |
| கரட் | 300 | 380 | 380 | 440 |
| பூசணி | 240 | 250 | 240 | 260 |
| புடோல் | 180 | 150 | 240 | 220 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 240 | 270 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 500 |
| வெண்டக்காய் | 120 | 150 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 240 |
| பயற்றங்காய் | 350 | 350 | 280 | 400 |
| லீக்ஸ் | 280 | 220 | 300 | 320 |
| பீற்றூட் | 260 | 300 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 400 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 450 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 350 | 240 | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 90 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 350 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 80 | 50-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 300 | 400 |
| முள்ளங்கி | 180 | 100 | 160 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 120 | 150 |


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.N.K. முருகையா

அன்பெனும் கூட்டிலே
அகிலமாய் இருந்தீரே
ஆதரவின் நிழலாய் இருந்தீரே
இனிமையான பேச்சால்
அனைவரையும் கவர்ந்தீரே
என்றும் கண்ணீருடன்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.


அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

நீங்காத நினைவில்: மனைவி–இரட்ணேஸ்வரி
பிள்ளைகள் – கஜன், ரவிப்பிரியா
மருமக்கள் – வசந்தகுமார், விஜய மணி
பேரப்பிள்ளைகள் – தனுஷ்கா, கபிலாஸ், லக்ஷனா

(12123)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் வெடிபொருட்கள் மீட்பு



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்வாய் கிழக்கு பகுதியில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டது. நேற்று தோட்ட வேலைக்கு குழி வெட்டிய போது மோட்டார் குண்டு, மிதிவெடி மற்றும் கைக் குண்டுகள் ஒரு தொகுதி வயர்கள் உட்பட சிலவெடி பொருட்களும் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து வெடி பொருட்களை அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-60)

## மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனம் அதிரடிப் படையினரால் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண்அகழ்வில் ஈடுபட்ட பட்டா ரக வாகனம் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் நேற்று வியாழக்கிழமை காலை சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட பட்டா வாகனத்தை அதிரடிப் படையினர் துரத்திச சென்ற வேளை கடத்தல்காரர்கள் வாகனத்தை கைவிட்டு தப்பித்துச் சென்றுள்ளனர். விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்ட வாகனம் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுளளது (நி-6-60)

## இலங்கை தமிழ் சைகை அகராதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் செவிப்புல வலுவற்றோர் அமைப்பினரால் நடத்தப்படும் இலங்கை தமிழ் சைகை அகராதி வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் 345, கோவில் வீதி துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் சமூக சேவைகள் திணைக்களம் செல்வி. அகல்யா செக்ராஜாவும் யாழ். மாநகரசபை முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (6)

## எரிவாயு பெற்றுத் தரக்கோரி மன்னாரில் மக்கள் வீதியை மறித்து போராட்டம்

(மன்னார்)

மன்னார் பேசாலை கிராம மக்கள் நேற்று வியாழக்கிழமை பேசாலைபிரதானவீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். மன்னாரில் நேற்று லிட்ரோ எரிவாயு விநியோகம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டது.

பேசாலை பகுதி மக்களுக்கு லிட்ரோ எரிவாயு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படாத காரணத்தால் மக்கள் பிரதான வீதியை மறித்து போராட்டம் மேற்கொண்டமையினால் குறித்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் பேசாலை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன் போது பேசாலை கிராமத்திற்கு 100 லிட்ரோ எரி வாயு பெற்றுத்தருவதாக பொலிஸார் உறுதி அளித்ததை தொடர்ந்து மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது. (நி-6-285)

## சாவகச்சேரி கல்வயல் வீரகத்தி விநாயகர் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி-கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பிறப்பு தினத்தன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது என தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (6)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் திருமஞ்சப் பவனி நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சிறப்பாக இடம்பெற்றது.

(படம்:-ரவிசாந்)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவிக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி நாளை சனிக்கிழமை காலை 8.30- நெடுக்குளம் தாய்மார் கழகம், முற்பகல் 10.15-வசந்தபுரம் CC சன சமூகநிலையம், முற்பகல் 11.30 -கொலன் தோட்டம், 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30-3 ஆம் குறுக்கு தெரு கொழும்புத்துறை, முற்ப கல் 10.15-1ஆம் குறுக்குதெரு கொழும்புத்துறை, பிற்பகல் 12.15 -2 ஆம் குறுக்குதெரு கொழும்புத்துறை, 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30- எழிலூர் சன சமூக நிலையம், முற்பகல் 10.15- 5 ஆம் குறுக்குதெரு கொழும்புத் துறை, பிற்பகல் 12.15-சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம், 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30-மகேந்திரபுரம்,முற்பகல் 10.15-வளன்புரம்,பிற்பகல் 12.15 -சென்மேரீஸ் கோயில் (AV),21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 A.V வீதி புகையிரத வீதி சந்தி, முற்பகல் 10.15 - கொழும்புத்துறை விதானையார் லேன், பிற்பகல் 12.15- பாசையூர் சனசமூக நிலையம்,23 ஆம் திகதி சனிக்கிழமை காலை8.30 ஈச்சமோட்டை சனசமூக நிலையம், பாசையூர், முற்பகல் 10.15- புதுக்குடியிருப்பு, முற்பகல் 11.30 பாண்டியன் தாழ்வு (புனித அன்னம்மாள் கோயில் அருகில்), 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30- வில்வம் தெரு, முற்பகல் 10.15- புளியடி சந்தி இலந்தைக்குளம், பிற்பகல் 12-கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம், 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30-விதானையார் லேன் ஈச்சமோட்டை, முற்பகல் 10.15 - பாசையூர் மகப்பேற்று நிலையம், பிற்பகல்- 12.15 சுண்டிகுளம் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறும் ஒரு நாய்க்கான ஊசிக்குரிய கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் என யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (6)

# இராசிபலன்

15.07.2022
ஆனி 01,வெள்ளிக்கிழமை
துதியை முன்னிரவு 8.16 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.28 மணிவரை
சுபநேரம் 6.00-7.30 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவாதிரை

வளவன்




எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, களஸ்திர சுகமுண்டு.




செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய விடயம் முடிவில் ஆதாயம் தரும்.




நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தெடர்வீர்கள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.




பெண்களால் பெருமை வந்து சேரலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் போட்டிகள் மாறும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், கௌரவமான நாள்.




விரதம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சயனக் குறைவான நாள்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் நிதானம் தேவை, ரோக பயமுண்டு, விரயங்கள் மேலோங்கும் நாள்.




நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.




கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடிவரும், வருமானம் திருப்தி தரும் வகயில் அமையும்.

ஆன்மாவே நீ எதை விரும்புகிறாயோ அதுதான் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகல் கடிதம் கையளிக்காவிட்டாலும்

## ஜனாதிபதி பதவி விலகியதாக கருதப்படும்-சபாநாயகர் அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதத்தை கையளிக்காவிடின் அவர் பதவியில் இருந்து விலகியதாக கருதி மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவி விலகல் கடிதத்தை நேற்று முன்தினத்திற்குள் அனுப்பி வைப்பதாக தொலைபேசி ஊடாக தமக்கு அறிவித்ததாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் பதவி விலகல் கடிதம் இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில் பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாகவும் பாராளுமன்ற பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)

## 'கோட்டாவை ஓட ஓட விரட்டுவோம்'

## தூதரகங்கள் முன்னால் போராட தயாராகும் புலம்பெயர் தமிழர்கள்

**(லண்டன்)**

**தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிரான போராட்டங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் தயாராகி வருவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.**

நாட்டைவிட்டு வெளியேறி தற்போது மாலைதீவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து சிங்கப்பூருக்கு செல்ல இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இந்நிலையில் சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில் இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு அந்நாட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் அந்நாட்டு தூதரகங்கள் முன்னால் போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"ஓட ஓட விரட்டுவோம்...நீதியின் முன் நிறுத்துவோம்...!" என்ற முழக்கத்துடன் ஏற்பாடாகி வரும் இப் போராட்டத்தில் அனைத்து தமிழர் அமைப்புக்களையும் ஒருங்கிணையுமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு கோரியுள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள் சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என ஐ.நா. மனித உரிமைச் சபையின் ஆணையாளர் மிச்சல் பசேலே அம்மையார் முன்னர் அழைப்பொன்றினை விடுத்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (நி)

## பொருளாதார ரீதியில் மட்டுமே இந்தியா இலங்கைக்கு உதவும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(டில்லி)

இலங்கையில் நிலவரம் மிகவும் உணர்வுபூர்வமானதாக காணப்படுகின்றது தேவையான இந்த தருணத்தில் இந்தியா இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவுவது குறித்து கவனம் செலுத்துகின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் எங்கள் அயலவர்கள் என்பதால் நாங்கள் அவர்களிற்கு உதவுவதற்கான அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம், அவர்கள் மிகவும் நட்புணர்வு மிக்கவர்கள். அவர்கள் மிகவும் கடினமான நிலையில் உள்ளதால் நாங்கள் அவர்களிற்கு உதவ விரும்புகின்றோம். கடந்த சில மாதங்களாக அந்த நாட்டிற்கு நாங்கள் மிகுந்த ஆதரவாக இருந்துள்ளோம்.

எங்கள் கவனம் இலங்கையின் பொருளாதார நிலை குறித்தும் எவ்வாறு உதவலாம் என்பது குறித்துமே காணப்படுகின்றது. நாங்கள் ஏனைய விடயங்களில் ஈடுபடவில்லை.

நாங்கள் பொருளாதார விடயங்கள் குறித்து மாத்திரமே கவனம் செலுத்துகின்றோம். ஏனைய விடயங்கள் குறித்து கரிசனை கொள்ளவில்லை, சமூக ஊடகங்களில் வெளியாகும் அனைத்திற்கும் நாங்கள் பதிலளிக்க முடியாது எனவும் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (நி)


# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி. யோகலட்சுமி ஜெகநாதன்

(ஆரம்பக்கல்வி ஆசிரியை)

யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை

**சேவை விபரம்**

05.02.1990-19.09-2005
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

20.05.2005-21.09.2010
க/கலகா தமிழ் வித்தியாலயம்

22.09.2010-20.09.2016
கொ/அந்தோனியர் ஆண்கள் மகா வித்தியாலயம்

21.09.2016-15.07.2022 (இன்று வரை)
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை

அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது சக ஆசிரியரின் ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக இருக்க மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை,
புத்தூர்.

(12130)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 16 ½ சூரி 11 செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10213 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: சூரி, செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த. உயர்தரம்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/10705 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 20 சூரி 1 செவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில் Engineer SLT ரெலிக்கொம்<br>எதிர்பார்ப்பு: குறைந்தது BSc பட்டதாரி<br>தொ.இ: B/10215 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 50 சூரி 10 செவ் 3<br>உயரம்: 4'5"<br>தகைமை/தொழில்: BFA பட்டதாரி<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/10738 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: சூரி 6 செவ் 5 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSc(Supermarket(U.K)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10216 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 3<br>கி.பா: 38 சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்: 145 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/10747 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 24 சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: BBA,AIB வங்கி உதவி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு :அரச உத்தியோகம்<br>தொ.இ: B/10220 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 36 ¾ சூரி, செவ் 12 இல்<br>உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்: BSc<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ:G/10753 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### மணத்திற்கு மனம்



தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீது ஏறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அவன் அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! இந்தப் பயங்கர இரவில் விடாப்பிடியாக முயல்வதைப் பார்த்தால் நீ எந்தப் பெண்ணின் மீதோ ஆசை கொண்டு இவ் வேலையைச் செய்வதாக நினைக்கிறேன். சில சமயங்களில் இத்தகைய ஆசை முடிவில் நிறைவேறாமல் போவது கூட உண்டு. இதற்கு உதாரணமாக சுந்தரவர்மன் என்ற இளவரசனின் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்'' என்று கூறிக் கதை சொல்ல ஆரம்பித்தது. சிருங்காரபுரியை சுத்தோதனவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனது மகன் சுந்தரவர்மன் நல்ல அழகன். அறிவாளி, சாமர்த்தியசாலியும் கூட. இதனால் அவனுக்குத் தம் மகளைக் கொடுக்கப் பல நாட்டு மன்னர்கள் போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். தம் மகள்களின் உருவப் படங்களை அவர்கள் சிருங்காபுரி மன்னனிடம் அனுப்பினார்கள். ஆனால் அவற்றில் எதுவுமே சுந்தரவர்மனுக்குப் பிடிக்கவில்லை.

சுந்தரவர்மன் அவ்வப்போது ஆஸ்தான ஓவியனான தனஞ்செயனின் ஓவியர் கூடத்திற்குச் சென்று அவர் வரையும் ஓவியங்களைக் கண்டு மகிழ்வான். ஒரு நாள் அவன் ஓவியக் கூடத்திற்குச் சென்ற போது தனஞ்செயன் அழகிய பெண் ஒருத்தியின் உருவப் படத்தில் வண்ணம் தீட்டிக் கொண்டிருந்தான். சுந்தரவர்மன் அந்தப் படத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்து "ஆகா! எவ்வளவு அழகான பெண்! இப்படியும் ஒருத்தி உண்மையிலேயே இருக்கிறாளா?" என்று எண்ணி மலைத்து நின்றான்.

சற்று நேரம் கழித்து தனஞ்செயன் திரும்பிப் பார்த்தபோது சுந்தரவர்மன் "மிகமிக அழகாக இருக்கிறாளே. யார் இவள்? உன் கற்பனையில் உதித்தவளா அல்லது இவளை எங்காவது கண்டாயா?" என்று கேட்டான்.

தனஞ்செயனும் சிரித்தவாறே "இவள் இதே ஊரில் தான் இருக்கிறாள். பெயர் பூர்ணிமா. ஒரு ஏழை விவசாயியின் மகள். மணமாகாதவள்" என்று அவளைப் பற்றிக் கூறினான். சுந்தரவர்மனும் "நான் இவளைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான். (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## தமிழனின் ஆற்றல்




சேவகர்கள் மலர் வளையத்தை நீட்டினார்கள். அதை வாங்கிக் கொண்ட செங்குட்டுவன் மண்டியிட்டு இறந்த வீரர்களின் காலடியில் வைத்தான். செங்குட்டுவனின் செயலில் மனப்பூர்வமான மரியாதையும் நன்றியும் தெரிந்தது.

பல்லாயிரம் மைல்கள் தாண்டி சேர நாட்டில் இருக்கும் அந்த வீரர்களின் மனைவியரையும் குழந்தைகளையும் ஒரு விநாடி எண்ணிப்பார்த்தான் செங்குட்டுவன்.

அமைச்சரே இவர்களின் உறவினருக்குச் சொல்லி அனுப்புங்கள். அவர்கள் வந்த பிறகு அடக்கம் செய்ய பொறுப்பான அதிகாரிகளை இங்கே இருக்கச் சொல்லுங்கள்.

அப்படியே ஏற்பாடு செய்கிறேன் மன்னா!

இவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக ஒரு இழப்பீட்டுத் தொகை வழங்க ஏற்பாடு செய்யுங்கள். இவர்களின் மனைவியர் காலம் முடியும் வரை மாதா மாதம் உதவித்தொகை வழங்கவும் ஏற்பாடு செய்யுங்கள்.

உடனடியாக ஏற்பாடு செய்கிறேன் மன்னா!

செங்குட்டுவன் தான் தங்க ஏற்பாடு செய்திருந்த மாளிகைக்குப் போனான். தொடர்ச்சியான கடின உழைப்புக்குப் பிறகு கிடைக்கிற ஓய்வுக்கு ஈடு இணையே கிடையாது.

ஓய்வெடுக்கும் அறைக்குள் போய் உட்கார்ந்ததும் இந்த செங்குட்டுவன் உணர்ந்தான்.

அப்போது சேவகன் ஒருவன் உள்ளே வந்தான். 'மன்னா, தங்களைக் காண மறையோன் மாடலன் வந்திருக்கிறார்' என்றான்.

வேதங்களை நன்றாகக் கற்று அறிந்தவர், முக்காலங்களை உணர்ந்தவர் மாடலன்.

மூவேந்தர்களின் தேசங்களிலும் அவரை அறியாதவர்கள் எவரும் இல்லை.

'வரச் சொல்' என்றான் சேரன்.

மாடலன் உள்ளே வந்ததும் சேரனின் வெற்றிக்கு வாழ்த்தினான். பின்னர் ஒரு பெருமூச்சுடன், 'மாதவியின் கானல் வரியில் தொடங்கியது. இப்போது கனக விசயர்களுக்குப் பாடம் புகட்டுவது வரை வந்திருக்கிறது' என்றான்.

'கனக விசயர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்கிற நோக்கம் நெடுங்காலமாக எனக்கு இருந்தாலும் அது இப்போது இந்தக் கோயில் எழுப்புவதன் மூலமாக நிறைவேறியதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி' என்றான் சேரன். 'நீ சொல்வதைப் பார்த்தால் கண்ணகி விடயத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல நிகழ்வுகள் நடந்திருப்பதாகப் புரிகிறது. அவைகளை எனக்குக் கொஞ்சம் விபரமாகச் சொல்ல முடியுமா?'

'மன்னா, உனக்கு இப்போது அவசர வேலை எதுவும் இல்லையே?!'

'இல்லை, ஒரு பெரிய வேலையை நினைத்தது போலவே முடித்த சந்தோசத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன். நெடுந் தூரப் பயணத்திலும் போரிலும் களைத்திருக்கும் என் படையினர், பரிவாரத்தினருக்கும் நல்ல ஓய்வு தேவை. அதற்காக இரண்டொரு நாட்களுக்கு எல்லோருக்கும் உணவு, தூக்கம், கேளிக்கைகள் மட்டுமே.

'அப்படியென்றால் கண்ணகி கதையை நான் ஆரம்பத்திலிருந்தே சொல்கிறேன்' மாடலன் ஆரம்பித்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா!
> – கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோட்டா பரவாயில்லை என்று ரணில் சொல்ல வைப்பார் போலும்

ஒரு நாட்டை ஆண்ட மன்னன் மக்களிடம் இருந்து வரியை வசூல் செய்வதில் மிகவும் கண்டிப்பாக இருந்தான்.

பத்து மூடை நெல்லுத் தர வேண்டும். நான் ஒரு மூடை அரிசி தருவேன் என்பது அந்த மன்னனின் அறிவிப்பாக இருந்தது.

இதனால் நாட்டு மக்கள் மிகுந்த துன்பமடைந்தனர். மன்னனைக் குறை கூறினர். இவரெல்லாம் ஒரு மன்னரா? என்று திட்டித் தீர்த்தனர்.

மக்களின் திட்டல் மன்னர் காதில் எட்டிய போது மன்னர் கவலை கொண்டார்.

பத்து மூடை நெல்லுக்கு ஒரு மூடை அரிசி கொடுத்தும் இந்த டிக்கள் என்னைக் குறை கூறுகின்றார்களே என்று கவலை கொண்ட மன்னன், தன் மகனிடம் மேற்போந்த விடயத்தைக் கூறி, மக்களிடம் இருந்து நல்ல பெயர் வாங்க என்ன செய்ய வேண்டும் என ஆலோசனை கேட்டான்.

அதற்கு அவரின் மகன்; ஆட்சிப் பொறுப்பை என்னிடம் தாருங்கள். மக்கள் உங்களை நல்லவர் என்று சொல்ல வைக்கின்றேன் என்றான்.

மகனின் ஆலோசனைப்படி மன்னர் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் கொடுத்தார்.

இப்போது புதிய மன்னர் ஓர் அறிவிப்பை நாட்டு மக்களுக்கு விடுகின்றார்.

பொதுமக்கள் பத்து மூடை நெல்லுத் தர வேண்டும். நான் அவர்களுக்கு ஒரு மூடை உமி கொடுப்பேன் என்பதாக அந்த அறிவித்தல் இருந்தது. இந்த அறிவிப்பால் நாட்டு மக்கள் கடும் துயர் கொண்டனர். பசி பட்டினியால் வாடினர்.

முன்னைய மன்னர் எவ்வளவு நல்லவர் என்று புகழ்ந்தனர்.

மக்களின் புகழ்ச்சி முன்னைய மன்னரின் காதை எட்டியபோது அவர் அகமகிழ்ந்தார் என்பதுதான் அரிசி கொடுத்த ராசாவும் உமி கொடுத்த ராசாவும் என்ற கதையாகும்.

இந்தக் கதையை நாம் கூறும்போது இது எதற்கானதென்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டு மக்கள் ஓடோடத் துரத்தியுள்ளனர்.

இப்படியொரு சம்பவம் இந்த நாட்டில் முன்பும் நடந்ததில்லை. இனியும் நடக்கப் போவதில்லை என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இப்போது பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பெடுத்துள்ள ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பரவாயில்லை என்று சொல்ல வைத்து விடுவார் போல் தெரிகிறது.

அந்தளவுக்கு மக்களின் கருத்துக்களை உதாசீனம் செய்யும் அளவில் ரணில் விக்கிரமசிங்கவின் போக்கு அமைந்துள்ளதென்பதை அவதானிக்க முடிகிறது.

என்ன செய்வது 69 இலட்சம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியானவர் உலக நாட்டில் தங்குவதற்கு ஓர் இடமின்றி அலைகிறார்.

ஆனால் இங்கோ தேர்தலில் ஓர் ஆசனத்தைக்கூட எடுக்காதவர் பிரதமர், ஜனாதிபதி என்ற பதவிகளை ஏற்ற வண்ணம் இருக்கிறார்.

அட! இதுவல்லோ விதியின் விளையாட்டு.

## ஜனாதிபதியாக தெரிவானால் பதவியை ஏற்பதற்கு தயார்
### சரத் பொன்சேகா தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் தம்மை ஜனாதிபதியாக தெரிவு செய்தால் ஜனாதிபதிப் பதவியை ஏற்க தயார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு குழு உட்பட சில பாராளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுமாறு தம்மிடம் கோரப்பட்டுள்ளது.

எனவே தாம் தெரிவு செய்யப்பட்டால் பதவியை ஏற்றுக்கொள்ளப்போவதாக முன்னாள் இராணுவத் தளபதி நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்தீர்களா என்று கேட்டதற்கு பீல்ட் மார்ஷல் பொன்சேகா தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

தமது தனிப்பட்ட விவாதங்கள் குறித்து தலைவரிடம் சொல்ல வேண்டியதில்லை என்று சரத் பொன்சேகா தெரிவித்தார். (ம-7)

## இராணுவ துப்பாக்கி அபகரிப்பு;
## குற்றத்தடுப்பு பிரிவினரிடம் விசாரணை ஒப்படைப்பு

பத்தரமுல்லை - பொல்துவ சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவச் சிப்பாய் ஒருவரை தாக்கி அவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின்போது இராணுவச் சிப்பாய் ஒருவரிடமிருந்து T-56 ரக துப்பாக்கி மற்றும் 60 ரவைகள் அடங்கிய 2 ரவை கெப்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களின் தாக்குதலால், இராணுவ வீரர் மற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், சம்பவத்தின்போது மொத்தமாக 42 பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## ஜனாதிபதி மாளிகையில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

கொழும்பு ஜனாதிபதி மாளிகைக்குள் சிறிய கஞ்சா பொதியுடன் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா மீரிகமை பிரதேசத்தை சேர்ந்த 24 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையின் நீச்சல் தடாகத்திற்கு அருகில் சந்தேகத்திற்குரிய வகையில் நடந்து கொண்ட இளைஞனை பரிசோதித்தபோது கஞ்சா பொதியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

தேன் தானும் கெடாது. தன்னிடத்து வந்த பொருட்களையும் கெடவிடாது. பஞ்சாமிர்தத்தில் தேன் உள்ளது. இது நீடித்து நெடுநாள் இருக்கும். பெரியவர்கள் தேனுக்கு ஒப்பானவர்கள்.

'தான்' இருந்தால் குழம்பு! 'தான்' இல்லாவிட்டால் ரசம்! 'தான்' என்னும் அகங்காரம் இருந்தால் வாழ்க்கை குழப்பமாகும். அகங்காரம் இல்லாத வாழ்க்கை தெளிந்து ரசமாக இருக்கும்.

நான் எனும் அகப்பற்றை அறவே துறந்து உலகை மறந்து அருள் நெறியில் சிறந்து விளங்க வேண்டும்.

உலகத்து ஜீவராசிகள் அனைத்தும் குறுக்காக அகலவாட்டில்தான் வளருகின்றன. மனிதன் ஒருவன் தான் உயரமாக வளர்கின்றான். ஆகவே மனிதனுக்கு உயர்ந்த தெய்வச் சிந்தனை அவசியம். நூல்களை நுணித்து உணர்தல் வேணடும். பழங் [illegible] புறக்கணிக்க கூடாது.

## எரிபொருள் வரிசையில் காத்திருந்து வீடு திரும்பியவர்
### கால்வாயில் சடலமாக மீட்பு

(சிலாபம்)

சிலாபம் லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் வரிசையில் காத்திருந்து விட்டு பின்னர் வீடு திரும்பிய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முன்னேஸ்வரம் வீதியின் கால்வாயில் இருந்து அவரது சடலம் நேற்று முற்பகல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோல் இன்மையால் உந்துருளியின் எரிபொருள் தாங்கியை துவிச்சக்கரவண்டியில் வைத்து கொண்டு அவர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பிரவேசித்துள்ளார்.

இந்நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்ட இடத்தில் குறித்த துவிச்சக்கரவண்டி இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் - ரம்பேபிட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7)

## இந்தியாவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன் போராட்டம்

(கொழும்பு)

இந்தியாவில் இலங்கைத் தூதரகத்திற்கு முன் போராட்டம் நடத்துவதற்காக மக்கள் ஒன்றுகூடியபோது அவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மக்களுக்கு ஆதரவாக ஜனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி இந்தியாவில் இலங்கைத் தூதரகத்திற்கு முன் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை "கோட்டா கோ ஹோம்" என கோஷம் எழுப்பியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தம்மிக்கவின் பொறுப்புக்களை கையகப்படுத்தினார் ரணில்
### விசேட வர்த்தமானி வெளியீடு

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டு, விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் முன்னாள் அமைச்சர் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேராவின் கீழ் இருந்த பல திணைக்களங்கள் பதில் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முதலீட்டு ஊக்குவிப்புத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட தம்மிக்க பெரேராவுக்கு ரத்னாலங்கா பாதுகாப்பு நிறுவனம், முதலீட்டுச்சபை மற்றும் துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு ஆகியவற்றின் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

எனினும் அந்த பொறுப்புக்கள் அனைத்தும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளன. (ம-7)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ராம நவமி

சமஸ்கிருதத்தில் 'ரா' என்றால் 'ஒளி வீசுவது' என்றும், 'மா' என்றால் 'நான்' என்றும் பொருள்.

என்னுள் எது ஒளி வீசுகிறதோ, அதுவே ராமா சிருஷ்டியின் ஒவ்வொரு துகளிலும் எது சுடர் விடுகிறதோ, அதுவே ராமா.

தசரதனுக்கும் கோசலைக்கும் பிறந்தவர் ராமர்; சமஸ்கிருதத்தில் 'தசரதர்' என்றால் 'பத்து ரதங்களை உடையவர்' என்று பொருள். தசரதர் என்னும் சொல் ஐம்புலன்களையும், ஐந்து கர்மேந்திரியங்களையும் குறிக்கிறது. சமஸ்கிருதத்தில் 'கௌசல்யா' என்னும் சொல்லுக்கு 'தேர்ச்சியுடைய' என்று பொருள். பத்து ரதங்களின் திறன்மிகுந்த சாரதி (தேரோட்டி) தான் ராமரை ஈன்றெடுக்க முடியும். ஐம்புலன்களையும், ஐந்து கர்மேந்திரியங்களையும் திறன்படப் பயன்படுத்தும் போதுதான் உள்ளிருந்து ஒளி பிறக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 32

பிரகடனத்தை 355 பிரதிநிதிகள் ஆதரித்தனர். தேசியம் அல்லது இனத்தைப் பொருட்படுத்தாமல் உக்ரைனில் வசிக்கும் மக்கள் தொகை முழுவதும் இந்த பிரகடனம் கம்யூனிஸ்ட் பெரும்பான்மை மற்றும் ஜனநாயக எதிர்ப்பிற்கு இடையேயான முக்கிய பிரச்சினைகளில் படிப்படியாக ஒருங்கிணைக்கப்பட்ட பார்வையின் தொடக்கத்தைக் குறித்தது.

ஜூலை 18 அன்று, ஒலெக்சாண்டர் மோரோஸ் தலைமையிலான குழு லியோனிட் க்ராவ்சுக்கை (Leonid Kravchuk) சோவியத் இறையாண்மை உக்ரைனின் பாரா ளுமன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

24 ஒக்டோபர் 1990 அன்று, பாராளுமன்றம் சோவியத் உக்ரைனின் 1978 அரசியலமைப்பை திருத்தியது. குறிப்பாக பிரிவு 6 ஐ விலக்கியது. திருத்தங்களுக்கு முன், சோவியத் உக்ரைனின் உச்ச ஆளும் குழு சோவியத் உக்ரைனின் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவாக இருந்தது. 24 ஓகஸ்ட் 1991 அன்று பாராளுமன்றம் உக்ரைனை சுதந்திர உக்ரைன் என்று அறிவித்தது. மற்றும் சுதந்திரப் பிரகடனத்திற்கு ஆதரவாக வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தது. அடுத்த நாட்களில் அது உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியையும் தடை செய்தது. மற்றும் அதன் சொத்துக்களை தேசியமயமாக்கியது (உண்மையில் கம்யூனிஸ்ட் மேல்மட்டம் (உயரடுக்கு) நாட்டை தொடர்ந்து ஆட்சி செய்ததால் இந்த தடை கோட்பாட்டு ரீதியாக மட்டுமே இருந்தது).

டிசெம்பர் 5, 1991 இல் லியோனிட் க்ராவ்சுக் தனது பாராளுமன்ற தலைவர் (பிரதமர்) பதவியை கைவிட்டு உக்ரைனின் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டார். பாராளுமன்றத் தலைவர் பதவி இவான் ப்ளைஷ்க்கு வழங்கப்பட்டது. ஜூன் 18, 1992 இல் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் "மக்கள் கவுன்சில்" குழுவிலிருந்து வெளியேறினர். அவர்களில் லெவ்கோ லுக்யானென்கோ, பாவ்லோ லாசரென்கோ, அனடோலி கினாக் மற்றும் பலர் இருந்தனர். உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட பிறகு, அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் எஞ்சியவர்கள் ("குழு 239") மற்ற இடதுசாரி கட்சிகளில் இணைந்தனர்; பெரும்பாலானவர்கள் சுதந்திரமான அரசியல்வாதிகளாக மாறினர்.

இதே நேரத்தில் கோர்பச்சேவ், தேசியவாதத்தின் எழுச்சியை எதிர்கொண்டார். வெளியுறவுக் கொள்கை, இராணுவம் மற்றும் நிதி அமைப்பு ஆகியவற்றின் மையக் கட்டுப்பாட்டைப் பாதுகாக்கும் அதேவேளையில் சோவியத் குடியரசுகளுக்கு பரந்த சுயாட்சியை நீட்டிக்கும் புதிய தொழிற்சங்க ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முன்மொழிந்தார். மொஸ்கோவிற்கு உக்ரைனால் வலியுறுத்தப்பட்ட இறையாண்மை உரிமைகள் கைவிடப்படுவதைத் தடுக்க, மாணவர்கள் தலைமையிலான வெகுஜன ஆர்ப்பாட்டங்களும் உண்ணாவிரதமும் ஒக்டோபர் 1990 இல் கீவ்வில் நடத்தப்பட்டன. அதே மாதத்தில் நரோட்னி ருக் உக்ரைனியின் உறுப்பினர் எண்ணிக்கை வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. இதனுடன் ருக், உக்ரைனின் மொத்த சுதந்திரத்தை தனது இறுதி இலக்காக அறிவித்தது. CPU மட்டுமே கோர்பச்சேவின் புதிய தொழிற்சங்க ஒப்பந்த திட்டங்களுக்கு தனது ஆதரவை அறிவித்தது.

மொஸ்கோவில் கோர்பச்சேவின் அரசாங்கத்தின் கடும்போக்கு உறுப்பினர்களால் ஓகஸ்ட் 1991 இல் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சதிப்புரட்சி இரண்டு நாட்களுக்குள் சரிந்தது. அதைத் தொடர்ந்து உக்ரைனிய பாராளுமன்றம் அவசரகால அமர்வில் ஓகஸ்ட் 24 அன்று உக்ரைனின் முழு சுதந்திரத்தை அறிவித்தது.

**உக்ரைனிய பாராளுமன்றம், அவசரகால அமர்வில், ஓகஸ்ட் 24 அன்று உக்ரைனின் முழு சுதந்திரத்தை அறிவித்தது. டிசெம்பர் 1 அன்று ஒரு வாக்கெடுப்பின் மூலம் மக்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு தனிநாடு பிரகடனம் செய்யப்பட்டது.**

(தொடரும்)

# போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்-ஐ.நா.வலியுறுத்து

(ஜெனிவா)

அனைத்து தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரேரஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் அரசியல் நெருக்கடி நிலைமை குறித்து அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் அத்துடன் போராட்டக் காரர்களின் மெய்யான கோரிக்கைகள், பிரச்சினைகளுக்கான மூல காரணங்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் குறிப்பிட்டுள்ளார். (நி)



# டீசலுடன் இன்று வருகிறது கப்பல்

(கொழும்பு)

டீசலை ஏற்றிய கப்பலொன்று இன்று வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடையும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் உவைஸ் மொஹமட் தெரிவித்துள்ளார்.

நாட்டை வந்தடையவுள்ள குறித்த கப்பலில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கொண்டு வரப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வன்முறைகளைத் தடுக்கவே அதிகாரம் வழங்கப்பட்டது இராணுவ ஊடகம் தகவல்

(கொழும்பு)

நாட்டின் உடைமைகள் மற்றும் உயிர் தேசங்களை தடுக்கும் வகையில் இராணுவத்தினருக்கு முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைகளைத் தடுப்பதற்காக இராணுவத்தினருக்கு இவ்வாறு அதியுயர் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இலங்கைக்கான பயணங்களை தவிர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு இங்கிலாந்து, சிங்கப்பூர், பஹ்ரைன், சுவிஸ் ஆகிய நாடுகள் தங்களது நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பாரிய எதிர்ப்புகளுக்கு வழிவகுத்துள்ளது. அங்கு பெரும் போராட்டங்கள், கலவரங்கள் இடம்பெற்று வருகின்றன. போக்குவரத்து நெருக்கடி ஏற் பட்டுள்ளது. எந்நேரமும் பாரிய வன்முறைகள் ஏற்படலாம்.

மருந்துகள், சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு இலங்கையில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு தெரிவித்துள்ளன. (நி)

# ஓய்வின்றி ஓடும் கோட்டா-சவுதி செல்லவுள்ளதாக தகவல்

(கொழும்பு)

நாட்டை விட்டு தப்பிச்சென்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது மனைவி மற்றும் மெய்ப் பாதுகாவலர்கள் இருவருடன் ஜித்தாவுக்கு பறக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் சர்வதேச ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலைதீவுக்கு தப்பிச்சென்றிருக்கும் இவர்கள், அங்கிருந்த தனி விமானத்தின் ஊடாக சிங்கப்பூர் சென்றடைந்துள்ளனர்.

சிங்கப்பூரில் இருந்தே சவுதி அரேபியாவில் உள்ள ஜித்தாவுக்கு செல்லவிருப்பதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

12 மணி முதல் இன்று அதிகாலை 5 மணிவரை ஊரடங்கு அமுல்படுத்தப் படுவதாக வர்த்தமானி வெளியாகியுள்ளது.

அதேவேளை, கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தை தொடர்ந்து நேற்றும் பதற்றம் நிலவியது. கொழும்பின் பிரதான வீதிகளில் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன் கவச வாகனங்களில் இராணுவத்தினர் வலம் வருகின்றனர். (ம-7)

## யாழ்.கந்தர்மடத்...

ஆலயத்திற்கு அருகில் இருந்த புகையிரதக் கடவையில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மானிப்பாய், ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி மகேந்திரராசா (வயது-59) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## பட்டாசு...

கிடைத்துள்ளதாக சபாநாயகரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கோட்டாபய ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகுவதாக வெளியான அறிவிப்பினை தொடர்ந்து பல பகுதிகளில் மக்கள் பட்டாசு கொளுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில்,மேல் மாகாணத்தில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையினால் தென்னம் மட்டைகளில் பட்டாசு சத்தங்களை எழுப்பி வித்தியாசமான முறையில் மக்கள் கொண்டாடி வருகின்றனர். (ம-7)

## புரட்சியாக...

தனது உத்தியோகபூர்வ முகநூலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் பாதுகாக்க போராடும் நாட்டை அழிக்க சிலர் சதி செய்கிறார்கள்.

நமது வரலாற்றில் மிகவும் அமைதியான மக்கள் போராட்டம் பாசிசவாத புரட்சியாக மாற நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் காப்பதற்கு போராடும் நாட்டையே அழிக்க சதி செய்கிறார்கள்.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக நடந்த கலவரங்களாலும் போராட்டங்களாலும் ஒரு நாடாக நாம் அனுபவித்த துன்பங்களை நீங்களும் நானும் அனுபவத்தில் அறிவோம்.

அத்தகைய சகாப்தத்தை மீண்டும் உருவாக்க நீங்கள் போராடவில்லை. பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் இருந்து நான் பின்வாங்கமாட்டேன் என அதில் தெரிவித்துள்ளார். (ம-7)

## குருந்தூர்மலை...

குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களையும் அகற்றுமாறு பொலிஸாருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதவான், முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு; குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களையும் அகற்றுமாறும், அது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

அத்துடன், குறித்த பகுதியில் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் தங்களுடைய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எந்த விதத்திலும் தடை விதிக்க கூடாது எனவும் குறித்த இடத்தில் அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் பொலிஸார் உரிய பாதுகாப்பினை வழங்க வேண்டும் எனவும் நீதவான் தமது தீர்ப்பில் அறிவித்துள்ளார்.

மேலும் குறித்த பகுதியானது தொல்லியல் திணைக்களத்தின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக காணப்படுவதால் அந்த பிரதேசம் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து அது தொடர்பாக அறிக்கையிடுமாறு தொல்லியல் திணைக்களத்துக்கு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணி முறிப்பு, குருந்தூர்மலையில் கடந்த ஜூன் 12 ஆம் திகதி புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கும் அங்கு நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதைத் தொடர்ந்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

இந் நிலையில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர், ஜூன் 16ஆம் திகதி இந்த விடயம் தொடர்பில் ஏற்கெனவே முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கினை நகர்த்தல் பத்திரம் மூலம், முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

அந்தவகையில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸ் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான், வழக்குத் தொடுநரான பொலிஸார், குருந்தூர்மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக ஜூன் 23க்கு திகதியிட்டிருந்தார்.

குருந்தூர்மலை தொடர்பான குறித்த வழக்கு, மீண்டும் மேற்படி திகதியில் விசாரிக்கப்பட்டபோது பொலிஸார் பூரணமான விளக்கத்தை அளிப்பதற்கு முடியாத சூழ்நிலையில் இருப்பதாகக்கூறி, கால அவகாசம் கோரியிருந்த நிலையில் வழக்கு ஜூன் 30ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.

பின்னர் ஜூன் 30ஆம் திகதி நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது,

இரண்டு தரப்பு வாதப்பிரதிவாதங்களை ஆராய்ந்த நீதவான், தீர்ப்புக்காக நேற்றைய தினத்துக்கு திகதியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நிலையான அரசு அமையாவிட்டால் நாடு விரைவில் மூடப்படலாம்

## மத்திய வங்கியின் ஆளுநர்



(கொழும்பு)

நிலையான அரசாங்கம் விரைவில் அமைக்கப்படாவிட்டால் நாடு விரைவில் மூடப்படலாம் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நியூஸ்நைட் நிகழ்ச்சிக்கே இக் கருத்தை வீரசிங்க கூறியுள்ளார்.

அத்தியாவசியமான பெற்றோலியத்துக்குச் செலுத்துவதற்கு போதுமான வெளிநாட்டு நாணயமாற்றானது கண்டுபிடிக்கப்படலாமா? என நிச்சயமில்லாத தன்மை நிலவுவதாக வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மீட்புப் பொதியொன்றைப் பெறுவதற்கான முன்னேற்றமானது, நிலையான நிர்வாகமொன்றைக் கொண்டிருப்பதிலேயே தங்கியுள்ளதாக வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தங்களால் இம்மாத இறுதி வரையில் குறைந்தது மூன்று தொகுதி டீசல்களுக்கும், ஒன்று அல்லது இரண்டு தொகுதி பெற்றோலுக்கும் நிதியளிக்க முடிந்ததாகவும், அதற்கப்பால் நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பெற்றோலியத்துக்கு தேவையான வெளிநாட்டு நாணயப் பரிமாற்றத்தை தங்களால் வழங்க முடியுமா? என நிச்சயமில்லாத தன்மை காணப்படுவதாக வீரசிங்க கூறியுள்ளார்.

அதானேலேயே தனக்கு பிரதமரொருவர், ஜனாதிபதி, முடிவுகளை எடுக்கக்கூடிய அமைச்சரவை தேவைப்படுவதாகவும், அதில்லாமல் அனைத்து மக்களும் பாதிக்கப்படப் போவதாக வீரசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நிலையான அரசாங்கமொன்று அமையுமானால் நெருக்கடியிலிருந்து மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து மாதங்களில் இலங்கை வெளிவருமென வீரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## இராஜினாமாக்...

எனினும் சில சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதால் அந்தக் கடிதம் இன்னும் வெளியிடப்படவில்லை என்று சபாநாயகரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதம் தொடர்பான அறிவிப்பு இன்றைய தினம் (வெள்ளி) வெளியிடப்படும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதம் தொடர்பில் மற்றும் சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது இராஜினாமாக் கடிதத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளார்.

இதனால் கடிதத்தின் சட்டபூர்வமான தன்மை உறுதிப்படுத்தப்பட்டவுடன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து கடிதத்தின் பிரதியை பெற்றுக்கொள்ளுமாறு சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## பிரதமர் பதவி...

பெற்ற எதிர்க்கட்சிகளின் விசேட கலந்துரையாடலின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்காக எதிர்க்கட்சிகள் பரிந்துரைக்கவுள்ள பெயரை இன்றைய தினம் இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது சபாநாயகருக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில், ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, 10 கட்சிகளின் பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் டலஸ் அழகப்பெருமவின் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணி கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜனாதிபதியாக...

தேவைப்படின் இந்த ஊரடங்கு நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் பிரதமராக டலஸ், சஜித் பிரேமதாஸ, சம்பிக்க ரணவக்க, தினேஷ் குணவர்தன ஆகியோரில் ஒருவரை நியமிக்க இரகசிய பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பதவியேற்ற கையோடு அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தி, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டப் போவதாக ரணில் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சமூக ஊடகங்கள் சில மணி நேரங்களுக்கு முடக்கப்படும் வாய்ப்பும் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவில் மற்றும் யாழ்ப்பாணம் ஐ.ஓ.சி நிலையத்தில்
# எரிபொருள் விநியோக அட்டைக்கே பெற்றோல் வழங்கப்படும்
### நேற்றுமுதல் இறுக்கமான நடைமுறை

(யாழ்ப்பாணம்)

நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் நேற்றைய தினம் பெற்றோல் விநியோகத்தின்போது எரிபொருள் விநியோக அட்டை வைத்திருந்தவர்களுக்கு மட்டுமே பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

நேற்றைய தினம் சாவகச்சேரி பிரேசே செயலகத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கும் நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தின் ஊடாக பெற்றோல் வழங்கப்பட்டது.

இதன்போது அங்கு நின்ற அனைவரிடமும் எரிபொருள் விநியோக அட்டை இருப்பதை யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களும் மிகவும் இறுக்கமாகப் பார்வையிட்டதுடன் எரிபொருள் விநியோக அட்டை இல்லாதவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதேவேளை இன்று (15) பருத்தித்துறை மற்றும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தலா 500 பொதுமக்களுக்கு நுணாவில் ஐ.ஓ.சி மூலம் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

இவர்களுக்காகன அறிவித்தல்கள் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தின் ஊடாக பெற்றோல் வழங்கப்படும்போதும் எரிபொருள் விநியோக அட்டை கட்டாயமானது என ஒலிபெருக்கி மூலமாக அறிவிக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பெற்றோல் விநியோகத்தில் யாழ். மாவட்டச் செயலகம் நடைமுறைப்படுத்தியுள்ள எரிபொருள் விநியோக அட்டை மற்றும் செயலி மூலமும் குறுஞ்செய்தி மூலமும் வழங்கப்படும் தகவல்கள் தொடர்பில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவதனூடாக நெருக்கடிகளைத் தவிர்க்கவும் பெற்றோல் விநியோகத்தை ஒழுங்குபடுத்தவும் முடியும் என யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

# கோட்டாக்கு சிங்கப்பூர் புகலிடம் வழங்கவில்லை
### சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சகம்

(கொழும்பு)



கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூர் புகலிடம் வழங்கவில்லை என சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாரிய நெருக்கடி மற்றும் பரவலான எதிர்ப்புகளுக்கு மத்தியில் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை சிங்கப்பூரை வந்தடைந்ததாக சிங்கப்பூர் ஊடகங்கள் செய்தியை வெளியிட்டன.

கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூர் நேரப்படி இரவு 7.17 இற்கு சாங்கி விமான நிலையத்தில் தரையிறங்கிய சவூதியா விமானத்தில் வந்திறங்கியதாக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அவர் சிங்கப்பூரில் எவ்வளவு காலம் தங்குவார் அல்லது வேறு ஒரு இலக்கு அவர் மனதில் இருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அவரது சிங்கப்பூர் பிரவேசம் குறித்து ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சகத்தின் பேச்சாளர், கோட்டாபய ராஜபக்ஷ, தனிப்பட்ட பயணமாக சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டதை உறுதிப்படுத்தினார்.

அவர் அரசியல் புகலிடம் கேட்கவில்லை மற்றும் அவருக்கு எந்த புகலிடமும் வழங்கப்படவில்லை. சிங்கப்பூர் பொதுவாக புகலிட கோரிக்கைகளை வழங்குவதில்லை என்றும் பேச்சாளர் கூறினார். (ம-7)

# மணற்காட்டில் விபத்து குடும்பஸ்தர் காயம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை (14) பிற்பகல் மருதங்கேணி - பருத்தித்துறை வீதியில் பயணித்த ஹ்யஸ் வாகனமும் துவிச்சக்கரவண்டியுமே மணற்காட்டு சந்திப் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

படுகாயம் அடைந்தவர் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

# பிரிவினைக்கு இடம் கொடுக்காமல் கூட்டு இணக்கப்பாட்டுடன் செயற்படுங்கள்
### பெப்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

பிரிவினையை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் கூட்டு இணக்கப்பாட்டுடன் செயற்படுங்கள் என பெப்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் பெப்ரல் அமைப்பு முக்கிய வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அத்துடன் இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பிரிவினையை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் கூட்டு இணக்கப்பாட்டுடன் அதிபர் மற்றும் பிரதமர்களை தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.


நேற்று முன்தினம் கொழும்பில் பிரதமர் அலுவலகத்தை பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் இணைந்து முற்றுகைப் போராட்டம் மேற்கொண்டனர்.

அதன்போது போராட்டக்காரர்களை விரட்டியடிப்பதற்காக ஆயுதம் தாங்கிய படையினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி பிரயோகம், நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகை தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

அதனையடுத்து போராட்டக்காரர்களுக்கும் படையினர், பொலிஸாருக்கும் இடையில் மோதல் தீவிரமடைந்தது. இதனையடுத்து பொலிஸாரின் தடுப்புக்களையும் மீறி போராட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தை கைப்பற்றினர்.

இவ்வாறு இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது கண்ணீர் புகை தாக்குதலுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந் நிலையிலேயே பெப்ரல் அமைப்பு இவ்வாறான கோரிக்கையை முன்வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)




வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12142)

076 825 7716 (ஆகாஸ்)



**பெண் வேலையாள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் விமான பயணச்சீட்டு நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு (12144)

077 957 0599



**வேலை வாய்ப்பு**

யாழ். நெல்லியடியில் இயங்கிவரும் முன்னணி காப்புறுதி நிறுவனம் ஒன்றில் Team Manager (குழு தலைவர்) இற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது. A/L இல் 3 பாடங்களில் சித்தி பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- வேறு நிறுவனங்களில் Micro மற்றும் Leasing இல் பணிபுரிந்த மற்றும் பணிபுரிந்து கொண்டிருப்பவர்களுக்கும் இதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிந்த, பணிபுரிந்து கொண்டிருப்பவர்களும் இவ் விண்ணப்பத்தினை மேற்கொள்ளவும்.

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (12143)

077 803 9320, 075 269 0188



**மணமகள் தேவை**

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதான விவாகரத்தான குழந்தையற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகரத்தான/ கணவனை இழந்த மணமகள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. (12138)

072 160 3500



**சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு**



யாழ்ப்பாணத்தில் சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு உண்டு.

(C-4607) தொடர்பு

077 885 2450



**மருந்தாளர் தேவை (Pharmacist)**

யாழ். நகரில் இயங்கும் மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் தேவை. (Pharmacist) சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு (12139)

077 870 2188



**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-4608)

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
- வயது - 22 தொடக்கம் 35
- தகுதி - பட்டதாரிகள்

V2 TRAVELS (C-4608)

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.